


# WORD OF CHRIST



வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 8 | ஜூன் 2000 | கனி 11

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**

*கொலேசெயர் 3 : 16*

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## வாசகர்கள் பகுதி

மார்ச் மாத இதழ் அறிவிப்பின்படி
பத்திரிக்கையின் இதர செலவுகளுக்கு கொடுத்து உதவியவர்கள்.

| பதிவு எண் | பெயர் | இடம் | ரூபாய் |
|---|---|---|---|
| 557 | K. தேவி | கோபி | 20 |
| 18 | S. பிச்சைமுத்து | நாகப்பன்பட்டி | 20 |
| 663 | K. கந்தசாமி | தெக்கலூர் | 20 |
| 634 | M. சத்தியராஜ் | கோட்டூர் | 20 |
| 862 | V. லோகிதாசன் | மனக்கடவு | 20 |
| 992 | V. அகிலன் | சேலம் | 50 |

"தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள் ளவர்களாவீர்கள். இந்தத் தர்மசகாயமாகிய பணி விடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல் அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்." (II கொரி. 9 : 11, 12)

*கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக,*
ஆசிரியர்

**இதழின் உள்ளே . . .** பக்கம்


1. இருதயம் 1
2. மே மாத இதழின் விடைகள் 5
3. மே மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் 5
4. ஆராதனையில் தேவன் விரும்பும் இசையின் வகை 6
5. கர்த்தருடைய ஊழியக்காரன் 9
6. ஆகானின் பாவம் 12
7. மனிதன் தேர்ந்தெடுக்க அதிகாரமுடையவனாயிருக்கிறான் 13
8. அவள் பிள்ளைப் பேற்றினால் இரட்சிக்கப்படுவாள் என்பதன் பொருள் என்ன? 16
9. புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் 20
11. வேத அறிவுப்போட்டி
12. நடப்பு செய்திகள்


FOR FREE DISTRIBUTION


**Published by**

**WORLD LITERATURE PUBLICATIONS**

POST BOX No. 5, Batlagundu - 624 202. SOUTH INDIA.

வேர்ட் ஆப் கிரைஸ்ட்


WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 8 ஜூன் 2000 கனி 11

ஆசிரியருரை

# இருதயம் (Heart)



மனிதனுடைய சரீரத்தில் இருதயம் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. தேவனாகிய கர்த்தர் மனிதனை நேர்த்தியாக சிருஷ்டித்து பாதுகாப்பான இடத்தில் இருதயத்தை அமைத்து இருக்கிறார். கர்த்தர் எல்லோருக்கும் நல்ல இருதயத்தைத்தான் கொடுத்திருக்கிறார். சில மனிதர்கள் மட்டுமே தன்னை உண்டாக்கின தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். பலர் தங்களுடைய இருதயத்தில் பொல்லாத பிசாசுக்கு இடங்கொடுத்து தங்களை தாங்களே அழித்துக் கொள்ளுகிறார்கள். பரிசுத்த வேதம் இதைக்குறித்து குறிப்பிடும் போது, "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமேதிருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?." (எரே 17:9) என்ற கேள்வியை எழுப்புகிறது. இதை அறியத்தக்கவர் தேவன் ஒருவரே, "இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்" என்று எரேமியா தீர்க்க தரிசிமூலம் உரைக்கிறார்.

மனிதனுடைய இருதயம் ஆண்டொன்றுக்கு எந்தவித ஓய்வு இல்லாமல் 40 மில்லியன் தடவை துடிப்பதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டு உள்ளனர். இப்படி அற்புதவிதமாக உருவாக்கப்பட்ட இருதயத்தில், நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்கின்றோமா? அல்லது உலகத்திற்கு முதலிடம் கொடுக்கிறோமா? சற்று சிந்தித்து பார்ப்போம். "மாறுபடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை" என (நீதி.17:20)ல் வாசிக்கின்றோம். இந்த உலகத்தில் உண்டாக்கப்பட்ட ஒவ்வொருவரும் தன்னை உண்டாக்கின தேவனை நினைக்க வேண்டும். நாம் எப்படி வந்தோம், நாம் என்ன செய்கிறோம், நாம் எங்கே போவோம் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்குள்ளும் எழும்ப வேண்டும். இதை சிந்திக்காது தன் இருதயத்தில் நினைக்கிறபடியெல்லாம் சுகபோகமாய் வாழ்ந்து திரிந்து

தாறுமாறாய் ஓடுகிற பெண் ஒட்டகத்தைப் போல இருந்தால், மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை என்ற வசனத்தின்படி நன்மையைக் கண்டடையாமல் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவோம்.

ஞானி சாலமோன் கூறுவதைக் கவனியுங்கள்: "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்" (நீதி. 28:26) நமக்கு என்ன தெரியும் யோசித்துப் பாருங்கள். நாம் ஒன்றும் அறியாதவர்கள், நம்மை நாமே மேட்டிமை கொண்டால் அது வீண். ஒரு தாலந்தை வாங்கினவன் தன் இருதயத்தின்படி எஜமானுக்கு உத்தரவு சொன்னான் அவனுடைய எஜமான் அவனை பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரனே என்றான். அதைப்போல தான் தன் இருதயத்தை நம்புகிறவனும் மூடனாயிருப்பான்.

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது என தீமோத்தேயு புஸ்தகத்தில் படிக்கின்றோம். இங்கு சாலமோன் மூலமாக கர்த்தர் நமக்கு கொடுக்கும் வார்த்தை "என் மகனே என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச்சாய் அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக. இவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம். எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்" (நீதி. 4:20-23) இன்றைய மனிதர்கள் எவைகளைக் கவனிக்க வேண்டும். எவைகளுக்கு செவிகொடுக்க வேண்டும், எவைகளை கண்டு கொள்ள வேண்டும், எவைகளை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும், என்றில்லாமல் தேவையற்ற காரியங்களுக்குச் செவி கொடுத்தும், காணல்நீரை தேடியும், முட்டையிட்டு அவயம் காத்து குஞ்சு பொரிக்காது போகின்ற கௌதாரியைப் போலும் பணத்தை காத்து வருகிறார்கள். இந்நிலைமாற வேண்டும் என்பதற்காகவே என் மகனே என் வார்த்தைகளைக் கவனி என்கிறார். அநேகர் வார்த்தைகளை கவனி என்றால் வாந்தி வருகிறது என்பார்கள். வேதாகமத்தில் இல்லாத ஒரு கதை சொன்னால் காது கொடுத்து கேட்பார்கள்.

இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ள வேண்டியது ஏன் அவசியமாயிருக்கிறது என்றால், பிசாசானவன் நம்முடைய இருதயத்தில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுவான், வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கும் பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான்" (லூக் 8:12) பார்த்தீர்களா? வசனத்தை கேட்டு அதை இருதயத்துக்குள்ளே எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ளாத பட்சத்தில் பிசாசு அவ்வசனத்தை

எடுத்துப்போடுவான். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்களை கவனித்துப் பாருங்கள் "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (லூக் 8:15)

மலைப்பிரசங்கத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்றார் (மத். 5:8). தேவனுடைய வார்த்தையை கேட்டு எல்லாவிதமான அசுத்தத்தையும் களைந்து இருதயத்தை சுத்தப்படுத்தும்போது பாக்கியவான்களாயிருப்போம். இருதயம் சுத்தமாயிருந்தால் சரீரம் முழுவதும் சுத்தமாயிருக்கும். ஏனென்றால் "இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்" (மத். 15 : 19). இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். ஒரு மனிதன் நன்மையானாலும், தீமையானாலும் தன் இருதயத்திலே முதலாவது சிந்திக்கிறான், திட்டமிடுகிறான். அதன்படி அதை நிறைவேற்ற பிரயாசப்படுகிறான். "என் மகனே நீ செவி கொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து" (நீதி. 23:19).

இருதயத்தை முழுமையாக கர்த்தருக்கு கொடுத்துவிடும்போது அது தேவனுடைய ஆலயமாகமாறுகிறது. பிரதான கட்டளையும் இதைத்தான் சொல்கிறது. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்பு கூருவாயாக" (மத். 22:37). தேவன் நம்மிடம் முழு இருதயத்தையும் எதிர்பார்க்கிறார். பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் ஸ்வீட் வாங்கி கொடுத்துவிட்டு திரும்பகேட்பார்கள். பிள்ளை தனக்கு கொடுக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ள! நன்கு கவனித்துப் பாருங்கள் தான் வாங்கின ஸ்வீட் முழுவதையும் அக்குழந்தை பெற்றோர்களிடம் அப்படியே கொடுத்துவிடும். தான் கொஞ்சம் பிட்டு எடுத்துக்கொண்டு மீதத்தை கொடுப்போம் என்று நினைக்கிறதில்லை முழுவதையுமே கொடுக்கும் எண்ணம் அக்குழந்தை பருவத்தில் எல்லோருக்கும் உண்டு அதே வேளையில் வாலிப பருவத்தில் உள்ள பிள்ளைகளிடம் எதையும் கொடுத்து விட்டு திரும்ப பெற முடியாது. ஆயிரம் சாக்குபோக்குகள் சொல்லி பெற்றோரையே ஏமாற்றி விடுவார்கள். ஆகையால் தான் கர்த்தர், சிறு பிள்ளைகளைப்போல தேவனுடையராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்றார். நீங்கள் தேவனுடைய பார்வையில் சிறுபிள்ளைகளைப்போல முழு இருதயத்தையும் அவருக்கு ஒப்பு கொடுங்கள்.

நமக்கு விசுவாசம் இருதயத்திலிருந்தே வரவேண்டும் என வேதம் போதிக்கிறது. "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோ. 10:9. 10). நம் இருதயத்திலே கிறிஸ்து எனக்காக மரித்தார் பின்பு உயிர்த்தார் என்று விசுவாசித்தால்தான் இரட்சிப்பு கிடைக்கும். பிலிப்பு மந்திரி சம்பவத்தை கவனித்துப்பாருங்கள். மந்திரி, பிலிப்புவின் விசுவாசத்தைக் கண்டு; "நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான்" (அப். 8:37).

நாம் தேவனை நோக்கி ஏறெடுக்கும் ஜெபமும் இருதயத்தில் இருந்தே வரவேண்டும். அன்னாளை பாருங்கள். "நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றி விட்டேன்" (I சாமு.1:15) என்கிறாள். இப்படி இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும்போது தேவஆசீர்வாதத்தை நிச்சயம் பெறுவோம், தேவனுக்கு மறைவான பொருள் ஒன்றுமில்லை, நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிற தேவனாயிருக்கிறார்.

நாம் தேவனை துதித்துப்பாடுவதும் இருதயத்திலிருந்தே வர வேண்டும். "உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்திடன் பாடி" (கொலோ 3:16) என வாசிக்கின்றோம். உதட்டளவில் பாடுவது தேவனை மகிமைப்படுத்துவதாக இருக்காது. உயிரற்ற வாத்திய கருவிகளை களைந்து இருதயத்திலிருந்து பக்தியுடன் பாட வேண்டும். பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் கட்டுண்டவர்களாக பக்தியுடன் இருதயத்திலிருந்து பாடும்போது தேவசமூகத்தில் கேட்கப்பட்டு சிறைச்சாலையின் கதவுகள் திரவுண்டன. அவ்விதமாக கருத்தோடும், பக்தியோடும் துதித்துப் பாட வேண்டும்.

காணிக்கை கொடுத்தலிலும் வெளிப்பிரகாரமான காணிக்கையை தேவன் அங்கிகரியார். இரண்டு காசு போட்ட ஏழை விதவைப் பெண்ணை பார்த்த ஆண்டவர்: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்றார். ஏனென்றால் அவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள். மனிதன் முகத்தை பார்க்கிறான் ஆனால் தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார். "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்" (II கொ. 9:7) என்ற வசனத்தின்படி மனதிலே அதாவது (இருதயத்தில்) தீர்மானித்தபடி கொடுக்க வேண்டும். மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக அல்ல. இருதயத்தில் நியமித்தபடி வரவுக்குத் தக்கதாக கொடுக்க வேண்டும்.

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

பிரியமான சகோதரனே, சகோதரியே காலம் கடந்து போய்க்கொண்டு இருக்கிறது, உங்கள் இருதயம் எப்படி இருக்கிறது? சற்று யோசித்துப்பாருங்கள்! இன்னும் ஆண்டவருக்கு உங்கள் இருதயத்தில் இடம் கொடுக்கவில்லையென்றால், இன்றே முழுமையாக ஒப்புக்கொடுங்கள்" இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்துபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி 3:15) மேலும் "ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" (எபி. 3:12). இச்செய்தியானது உங்கள் இருதயத்தை தொட்டு இருக்கும் என்று விசுவாசிக்கின்றேன். அவருடைய வார்த்தையை உண்மையும் நன்மையுமான உங்கள் இருதயத்தில் எல்லா காவலோடும் காத்து, நீங்கள் எதைச்செய்தாலும் முழு இருதயத்தோடு செய்து தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்கள். "இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிரும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" (I தெ. 3:13).

---

## மே மாத இதழின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அப்சலோம் | – | 11 சாமு. 14:28 |
| 2. | ஒபதியா | – | 1 இரா. 18:4 |
| 3. | மோசே | – | அப் 7:20 |
| 4. | பவுல் | – | 11 கொ. 1:5 |
| 5. | துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் | – | பிலி. 1:11 |
| 6. | ஓர்னான் (அர்வனா) | – | 1 நாளா. 21:23 |
| 7. | சோதோமைப் போலாகி கொமொராவுக்கு | – | ரோ. 9:29 |
| 8. | மிகுந்த | – | 1 தீமோ. 6:6 |
| 9. | கவிழ்த்துப் | – | தீத். 1:11 |
| 10. | தாவீது | – | 1 நாளா. 29:10, 14 |

## மே மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

1. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
2. C. மெர்லின் - வத்தலக்குண்டு
3. S. லலிதா பிரேமகுமாரி - மதுரை
4. S. விஜயலட்சுமிகிருபா - மதுரை
5. P. வினோத்குமார் - கொடுவாய்
6. G. மெர்சிரூபி - கொடுவாய்
7. S. சுகுமார்- கொடுவாய்
8. R. பெரியசாமி - செல்லூர்
9. M. ரவி - சென்னை
10. A. ஜோதிகாந்தம் - சோலிங்கம்.
11. N. துரைசாமி - கள்ளிகுடி
12. L. மனாசே - யாடாமாரி
13. M. ராணி - பில்லாந்திபெட்
14. N. கமலவேணி - சென்னை
15. G. பிரமிளா ஞானராஜ் - வேளாச்சேரி
16. N. கோபி - பூசாரிவலசை
17. Ref. No.958 - மதுரை
18. M. ரோஸ்மேரி - சென்னை
19. A. கந்தசாமி - தெக்கலூர்



# ஆராதனையில் தேவன் விரும்பும் இசையின் வகை

# The Kind of Music God wants in Worship

மனிதர்கள் விநோதமானவர்கள். நாம் விரும்புவதை நமது வழியிலே செய்ய ஆசைப்படுகிறோம். ஆவிக்குரிய காரியங்களிலும் கூட, தேவன் எதைச் செய்ய மனிதனிடம் எதிர்பார்க்கிறாரோ அதைப்பற்றி மனிதன் அவ்வளவாக அக்கரை எடுத்துக்கொள்வதில்லை.

பல ஆண்டுகளாக, கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களிடம் ஆராதனையில் இசைக்கருவிகளை ஏன் பயன்படுத்துகின்றனர் என நான் கேட்டிருக்கிறேன். ஏனெனில் சுவிசேஷத்தில் அது எங்கும் அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் அதை விரும்புகிறோம் என்பது தான் எப்போதுமே அவர்கள் அளிக்கும் பதிலாக இருக்கிறது! தேவனால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஆராதனையை இசைக்கருவிகள் இல்லாமல் அவர்கள் செய்யக்கூடுமா என்று நான் அவர்களைக் கேட்டிருக்கிறேன். அது சாத்தியம் என்று தான் எப்போதுமே அவர்கள் பதிலளிக்கின்றனர். அதாவது, இசைக்கருவிகளோடோ அல்லது அவை இல்லாமலோ தேவன் அவர்களுடைய ஆராதனையை ஏற்றுக்கொள்ளுகிறார் என்று இதற்குப் பொருள்.

ஆனால், இந்தக் கேள்வியைக் கவனித்துப்பாருங்கள்: ஆராதனையில் எந்த ஒரு பகுதியையாவது நமது விருப்பப்படி செய்யலாம் என்று நாம் கூற முடியுமா? நாம் ஜெபம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அது தேவனுக்கு ஏற்புடையதா? நாம் அவருடைய வசனத்தைக் கற்றுக்கொள்ளவோ, அல்லது செய்தித்தாளை படிக்கவோ கூடுமா? கர்த்தரின் பந்தியை நடத்தலாமா அல்லது அதை விட்டு விடலாமா? நமது வருமானத்திலிருந்து சபைப்பணிகளுக்கு காணிக்கை செலுத்தலாமா அல்லது நமது வருமானம் முழுவதையுமே நாம் வைத்துக்கொள்ளலாமா?

நிச்சயமாக, இக்காரியங்களில் வேதாகமம் என்ன கற்பிக்கிறது என நாம் அறிந்தால், ஆராதனையின் எந்த ஒரு பகுதியையும் நமது சொந்த தேர்வுக்கு கர்த்தர் விட்டு வைக்கவில்லை என்பதை நாம் அறிவோம். அவருடைய பிரசன்னத்திற்குள் நாம் வரும்போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அவருடைய வார்த்தையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தேவனைத் தொழுது கொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும் (சரியான நிலையிலும் இருதயத்தோடும்) உண்மையோடும், தேவனுடைய வார்த்தையில்

விவரிக்கப்பட்டிருப்பது போல தொழுது கொள்ள வேண்டும் என்று யோவான் 4:24ம் வசனத்தில் இயேசு தாமே தெளிவுபடுத்தினார். இப்படிப்பட்ட முக்கியமான ஒரு காரியத்தில் நமது சொந்த தேர்வுக்கு எதையும் விட்டு வைக்கவில்லை.

கிறிஸ்துவை விசுவாசிக்கும் யாராவது, குறிப்பாக கர்த்தரை உண்மையாகவே பிரியப்படுத்த விரும்புகிறவர்கள், தேவனுடைய மக்கள் எதைச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறரோ, அவ்வாறு தேவன் குறிப்பிட்டவைகளை மட்டுமே செய்ய வேண்டும் என்று தானே நீங்கள் நினைப்பீர்கள்! மாறாக, நம்மைப்பிரியப்படுத்த வேண்டும் என விரும்பலாமா? அவருடைய விருப்பங்களுக்குப் பதிலாக, நமது விருப்பங்களை நாம் செய்தால் தேவன் நம்மில் பிரியப்படுகிறார் என்று நாம் எப்படி எண்ணலாம்?

கிறிஸ்து தமது சபையைத் தொடங்கிய காலத்தில், அஞ்ஞான ஆராதனை முறைகளில் பலவிதமான இசைக்கருவிகளும், யூத வழிபாடுகளில் (ஆலயத்திற்கு வெளியில் மட்டும்) குறிப்பிட்ட அளவிலான இசைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. ஏற்கனவே மக்களுக்குப் பழக்கப்பட்டுப் போயிருந்த வழக்கத்தைத் தொடர்ந்து செய்வது இயற்கையான காரியமாகத் தோன்றியிருக்கும். தேவனுடைய குடும்பமாக அவரை எப்படி நாம் தொழுது கொள்ள வேண்டும் என்று புதிய ஏற்பாட்டின் அறிவுரைகளை நாம் காணும்போது, இப்படிப்பட்ட காரியத்தையா பார்க்கிறோம்.?

❀ "அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (மத்தேயு 26:30; மாற்கு 14:26).

❀ "நடு ராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைத் கேட்டுக்கொண்டிருந்தார்கள்" (அப். 16:25).

❀ "...இதினிமித்தம் நான் புற ஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது." (ரோமர் 15:9)

❀ "............. நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (1 கொரி. 14:15)

❀ "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டு களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடி கீர்த்தனம் பண்ணி...." (எபேசியர் 5:19)

❀ "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும்

ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி ...” (கொலோசெயர் 3:16)

❀ “உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்.” (எபிரேயர் 2:12)

❀ “ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்.” (எபிரேயர் 13:15)

❀ “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால், ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாக இருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.” (யாக்கோபு 5:13)

சபை கூடி வரும் போது, ஆராதனையில் தேவன் விரும்பும் வகையான இசையைப் பற்றிக் குறிப்பிடும் வசனங்களே இவை. ஒரு இசைக் கருவியைக் கூட்டுவது தேவனுடைய வார்த்தையோடு ஒன்றைக் கூட்டுவதாகும். அவ்வாறு செய்ய வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19 வசனங்களின் படி நாம் கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளோம்.

தேவன் இசைக் கருவிகளை தமது ஆராதனையில் ஏன் சேர்க்கவில்லை என்பதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

நாம் சிருஷ்டித்த இசைக்கருவிகளால் அல்லாமல், அவருடைய சிருஷ்டியாகிய நாம் - நமது வாயினால் - அவரைப் புகழ வேண்டும் என்று விரும்புகிறார்.

நாம் எங்கும், எந்த வேளையிலும், எந்த சூழ்நிலைகளிலும் பாட முடியும். நமது ஆராதனை ஏற்றுக் கொள்ளப்பட இசைக்கருவிகள் தேவைப்பட்டால், பலசமயங்களில் ஆராதனையே நடைபெற முடியாத நிலை ஏற்படும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆராதனையில் அவசியப்படும் ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டும். எல்லோரும் இசைக் கருவிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்க மாட்டார்கள். அவற்றை எவ்வாறு இசைக்க வேண்டும் என்பதும் எல்லாருக்கும் தெரியாது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இசைக்கருவியுடன் பாடிக் கொண்டிருந்தால், பாடலின் வார்த்தைகளை இசையின் சத்தம் அமுக்கிப் போடும். (எபே. 5:19)

நமது ஆராதனையில் தேவனை பிரியப்படுத்தும் காரியத்தை நாம் செய்வோம்.

**J.C. Choate** — **எஸ். எஸ். ராஜன்**

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# கர்த்தருடைய ஊழியக்காரன்

## The Servant of the Lord



***ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன் படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக் கொள். (I தீமோ. 5 : 22)***

*கர்த்தருடைய ஊழியக்காரன் மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாது தன்னைக் காத்துகொள்வது அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் அநேக பாவிகளை கிறிஸ்துவண்டை கொண்டு வரவேண்டிய ஒரு பொறுப்புள்ள வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறான். நோயாளியை சந்திக்க வேண்டிய டாக்டர் நோயாளியாகி விட்டால் நோயாளியை யார் கவனிப்பது அதைப்போல, பாவம் செய்கிறவர்களோடு உடன்பட்டு பாவியாகி விட்டால் மற்ற பாவிகளை நாம் எப்படி கிறிஸ்தவனாக மாற்ற முடியும். ஆகையால் மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாது கிறிஸ்துவுக்கேற்றபடி நடக்கையிலும், செய்கையிலும் முன்மாதிரியாக ஜீவிக்க வேண்டும். சிலவேளைகளில் முன்னணி ஊழியக்காரர்கள் செய்யும் தவறில் உடன் ஊழியக்காரர்களும் வீழ்ந்து விடுகின்றனர். காரணம் அவர்களை எதிர்க்க முடியவில்லை அப்படியிருக்க கூடாது. "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" (1கொ.3:13) ஆகையால் "தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" (ரோ.2:6) நீயோ உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்.*

**மனிதன் தேர்ந்தெடுக்க அதிகாரமுடையவனாயிருக்கிறான்**
**பாடம் - 2ன் விடை 1-B, 2-A, 3-C, 4-B**

**சபையைக் குறித்து . . . . வேதாகமம் என்ன சொல்லுகிறது?**

### What does the Bible say about . . .

***(தயவு செய்து கேள்வியை யோசித்து, வேத வாக்கியத்தை வாசித்து பின்பு உங்கள் விடைகளை சரிபாருங்கள்)***

**1. சபை என்றால் என்ன?**

*" ................ என் சபையைக் கட்டுவேன் : பாதாளத்தின் வாசல்கள் அதைமேற் கொள்வதில்லை" (மத். 16:18) "........ இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப்.2:47); "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; ....." (கொலே. 3:15)*

- ☐ ஒரு கூடிவரும் வீடு
- ☐ ஒரு பிரிவு
- ☐ "அழைக்கப்பட்ட", இரட்சிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்கள்

**2 சபையை விரிவுபடுத்தியது யார்?**

"இயேசு பிரதியுத்தரமாக ... இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:17, 18)

- ☐ கிறிஸ்து
- ☐ யோவான் ஸ்நானகன்
- ☐ பேதுரு, அப்போஸ்தலர்கள்

**3 சபை எங்கு ஆரம்பிக்கப்பட்டது?**

"கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கு சொன்னது. என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" (லூக். 24:49); மேலும் அப் 1.2)

- ☐ ரோம்
- ☐ லண்டன்
- ☐ எருசலேம்

**4 சபையின் அஸ்திபாரம் யார்?**

பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்ட பின்பு இயேசு சொல்கிறார். "... இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" (மத். 16:18). இதன்படி பவுல் விளக்குகிறார்: "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1 கொ.3:11)

- ☐ பேதுரு
- ☐ கிறிஸ்து
- ☐ ரோமாபுரியின் போப்

**5 சபையினுடைய பெயர் என்ன?**

"... நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு" (எபேசி. 3: 14.15). "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோ. 16:16)

- ☐ கிறிஸ்துவின் சபை

- ☐ சில மனிதனின் பெயர்
- ☐ வேதாகமத்தில் இடம் பெற்றிராத மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயர்கள்

**6 சபையின் தலைவர் யார்?**

பவுல் கிறிஸ்துவை குறித்து பேசும் போது "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" ... (கொலோ. 1:18)

- ☐ வருடாந்திரம் நடைபெறும் கருத்தரங்கு தலைவர்
- ☐ கிறிஸ்து
- ☐ ரோமாபுரியின் போப்

**7 ஒருவர் சபைக்குள் எப்படி செல்வது?**

"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப். 2:47)

- ☐ ஒருவருடைய சொந்த தீர்மானத்தின்படி அதில் சேர்க்கப்படுவது
- ☐ மற்ற அங்கத்தினர் பெயரில் ஓட்டு போடுவது மூலம்
- ☐ கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டு இவ்விதமாக சபையில் கர்த்தர் மூலமாக சேர்க்கப்பட்டவர்கள்.

**8 சபைக்கென்று என்ன கிரயம் செலுத்தப்பட்டது?**

" ... தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை" .... (அப். 20:28)

- ☐ ஒன்றுமில்லை
- ☐ கிறிஸ்துவின் இரத்தம்

**9 சபை ஆராதனையில் தேவன் என்ன எதிர்பார்க்கிறார்?**

"தேவன் ஆவியாயிருக்கிறார் அவரை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" (யோவா 4:24)

- ☐ நேர்மையுடனும் உண்மையுடனும் இருத்தல்
- ☐ வேதவாக்கியங்களின்படி ஆவியோடும் உண்மையோடும் ஆராதனை செய்தல்

**10 சபையின் நிர்வாகம் என்ன?**

"கிறிஸ்து தலைவர் (எபே. 1:22:23) மூப்பர்களாகவும் உதவிக்காரர்களாகவும் வேலை செய்வதற்கு தகுதி நிறைந்த மனிதர்கள் (I தீமோ. 3; தீத்து 1)

- ☐ போப்
- ☐ உதவிக்காரர்கள்
- ☐ மூப்பர்களும் உதவிக்காரர்களும்

**11 சபையின் வேலை என்ன?**

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்.16:15) திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரியுங்கள் (உதவுங்கள்) (யாக்.1:27)

- ❑ ஒரு சங்கத்தை செயல்படுத்தல்
- ❑ சுவிசேஷத்தை பிரசங்கித்தலும் தேவையிலிருப்பவர்க்கு உதவுதலும்

**12 முடிவில் சபைக்கு என்ன நடைபெறும்?**

"அதன் பின்பு முடிவு உண்டாகும்; . . . தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்" (1 கொ.15:24)


- ❑ அது முடிவடையும்
- ❑ கிறிஸ்துவோடு 1000 வருடம் பூமியிலே ஆட்சி செய்யும்
- ❑ அது பிதாவுக்கு ஒப்பு கொடுக்கப்படும்

இந்த வேத வாக்கியங்களை படித்து அதற்கு கீழ்படிந்து, கிறிஸ்து மூலமாக அவருடைய சபைக்குள் பிரவேசியுங்கள்.

***J.C. Choate***

# ஆகானின் பாவம்

**சிறுவர் பகுதி** — **வேதப்பகுதி: யோசுவா 7:1-26**



இஸ்ரவேலரை வழி நடத்தின யோசுவாவின் நாட்களில் ஆயி பட்டணத்தை வேவு பார்த்து, மூவாயிரம்பேர் போய் அப்பட்டணத்தை முறியடிக்கலாம் என்றார்கள். அந்தப்படியே மூவாயிரப்பேர் சென்று அவர்களை முறியடிக்க முடியவில்லை. அவர்கள் இஸ்ரவேலரில் 36பேரை வெட்டிப் போட்டார்கள். இதனால் இஸ்ரவேல் மக்கள் பின்னிட்டு வந்தார்கள். யேசுவாவோ தோல்வியால் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு தேவனை நோக்கி, தரையிலே முகங்குப்புற விழுந்து வேண்டினான்.

கர்த்தர் யோசுவாவை நோக்கி : நீ இப்படி முகங்குப்புற விழுந்து கிடக்கிறது என்ன? இஸ்ரவேலர்கள் பாவஞ்செய்தார்கள். நான் அவர்களுக்கு கட்டளையிட்ட உடன்படிக்கையை மீறி சாபத்தீடானதில் எடுத்துக் கொண்டார்கள் என்றார்.

யோசுவா சாபத்தீடானதை எடுத்தவர்களை கண்டுபிடிக்க கோத்திரம் கோத்திரமாக அழைத்தான். அப்பொழுது யூதா கோத்திரம் குறிக்கப்பட்டது. அவன் யூதாவின் வம்சங்களை வரப்பண்ணின போது சேராகின் வம்சம் குறிக்கப்பட்டது. சேராகின் வம்சத்தை வரப்பண்ணினபோது சப்தி குறிக்கப்பட்டான் அவன் வீட்டாரை வரப்பண்ணினபோது கர்மியின் மகன் ஆகான் குறிக்கப்பட்டான்.

யோசுவா ஆகானை நோக்கி : மகனே நீ அவருக்கு முன்பாக அறிக்கை பண்ணி நீ செய்ததை எனக்கு ஒளிக்காமல் சொல்லு என்றான். அப்பொழுது ஆகான் நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன். ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச் சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன் பாளத்தையும் கண்டு அவைகளை இச்சித்து எடுத்து என் கூடாரத்தில் புதைத்து வைத்து இருக்கிறேன் என்றான்.

யோசுவா ஆட்களை அனுப்பி அவைகளை எடுத்து வரச்சொல்லி, இஸ்ரவேலரெல்லாரும் அவன் மேல் கல்லெறிந்து அவைகளை அக்கினியில் சுட்டெரித்து அவன்மேல் பெரிய கற்குவியலைக் குவித்தார்கள் கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டு மாறினார்.

பார்த்தீர்களா! இஸ்ரவேலிலே ஒருவன் பாவஞ் செய்ததால் இஸ்ரவேலர் அனைவருமே ஒரு பெரிய தோல்வியை சந்திக்க நேர்ந்தது. அது மாத்திரமல்ல தேவனுடைய கோபத்தையும் பெற்றுக் கொண்டார்கள். தேவன் எவைகளை சாபமாக நம்மை விலக்க சொல்லுகிறாரோ அவைகளை நாம் விலக்கியே தீரவேண்டும், மீறி அப்பாவத்தை செய்தால் ஆகானுக்கு வந்த கெதிதான் நமக்கும் கிடைக்கும். ஆகையால் பாவத்தை வெறுத்து தேவன் நமக்கு கொடுத்துள்ள கிருபையுள்ள வார்த்தைகளையும், கட்டளைகளையும் கைக்கொள்ள வேண்டும். கைக் கொள்வீர்களா?

**மனப்பாட வசனம் :**

**“பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக”. (யாத்திராகமம் 20:17)**

## மனிதன் தேர்ந்தெடுக்க அதிகாரமுடையவனாயிருக்கிறான்


# Man Has A Right to Choose

***– Roger Dickson***



**பாடம் - 2**

தேவன் முதலாவது இரண்டு நபர்களை உண்டாக்கினார். அவர்கள் ஆதாமும் ஏவாளும் ஆவார். அவர் ஆதாமையும், ஏவாளையும் அவரது சுயசாலில் உண்டாக்கினார். ஆதாமும், ஏவாளும் தேவசாயலில்




இருப்பதினால் அனைவரும் அவ்வாறே இருக்கிறோம். கொஞ்சம் குறைய தேவசாயலில் இருத்தல் என்பது மனிதன் ஆவியின் சாயலில் இருக்கிறான் என்றும், அவன் தேர்ந்தெடுக்க அதிகாரமுடையவனாயிருக்கிறான் என்றும் பொருள்படும். நமது நடவடிக்கைகளுக்கேற்ப தேர்ந்தெடுக்கக் கூடிய படைப்புகளாக நாம் இருக்கிறோம்.

தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை பெற்றிருக்கிறோம் என்பது நமது தெரிந்து கொள்ளுதலுக்கு நாம் உக்கிராணப் பொறுப்புடையவர்களாயிருக்கிறோம் என்று பொருள். வேறு விதமாகக் கூறுவோமேயானால், பூமியில் நாம் தெரிந்து கொள்வனவற்றிற்கு முடிவில் நியாயத்தீர்ப்பின் போது நாம் உக்கிராணக் கணக்கு ஒப்புவிக்கிறவர்களாய் இருப்போம் என்பதாகும். வேதாகமம் கூறுகிறது, “ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்” (1கொரி. 5:10) என்று.

ஆதாமும், ஏவாளும் அவர்களோடு நாமும்கூட, தேவன் ஏற்படுத்தின தற்போதைய சூழ்நிலையான தெரிந்கொள்ளுதலை உருவாக்க அனுமதியளிக்கும் சந்தர்ப்பத்திலும், சூழ்நிலையிலும் இருக்க முடிகிறது. இது தெரிந்து கொள்ளுதலை உருவாக்க அனுமதிக்கும் ஒரு உலகமாகும். தேவன் இந்த இயற்கைச் சூழலில் கட்டளையை நிலைநிறுத்தும் பொருட்டு இயற்கை நியதிகளை உண்டாக்கினார். இவ்வுலகமானது அவசியமான எல்லாவிதமான சிறந்த சுற்றுச் சூழலை தனிமனிதனுடைய ஜீவியத்திற்கென்று பெற்றுள்ளபடியால், அவன் நன்மையானவற்றையோ அல்லது தீமையானவற்றையோ தெரிந்து கொள்ள சுயாதீனம் உடையவனாயிருக்கிறான்.

தெரிந்து கொள்ளுதலை உருவாக்குகின்ற இந்தச் சுற்றுசூழலில் ஒருவரோடொருவர் கொண்டுள்ள நமது செயல்பாடு அல்லது உறவுமுறைகளை கையாண்டு கொள்ளும்படி தேவன் நமக்கு நீதிக் கட்டளைகளைக் கொடுத்தார். ஆதாம், ஏவாளுக்குக் கொடுத்த இந்த நீதியான கட்டளைகளில் ஒன்று என்னவென்றால் அவர்கள் ஏதேன் தோட்டத்திலுள்ள விசேஷித்த விருட்சத்தின் கனியை அதாவது நன்மை தீமை அறியத்தக்க கனியைப் புசிக்க வேண்டாம் என்பதே (ஆதி. 2:16, 17). தேவனுடைய கட்டளைக்கு எதிராக எப்படியோ ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை முறித்து அந்த விருட்சத்தின் கனியை புசித்து விட்டார்கள் (ஆதி. 3:1-8). இந்தக் கனியைப் புசித்ததின் மூலம் அவர்கள் தேவனுடைய கட்டளையை மீறினார்கள் (எதிர்த்து பாவஞ்செய்தார்கள்) அதன் விளைவாக, பாவம் உலகத்தில்

பிரவேசித்தது. ஏனென்றால், அவர்களே பாவம் செய்வதற்கு முதன்மையானவர்களாயிருந்தார்கள். பாவம் தேவனிடத்திலிருந்து பிரிவினையைக் கொண்டு வந்தது. இப்படியாக ஆவிக்குரிய மரணம் வந்தது (ரோம. 5:12). ஆதாம் தனிப்பட்ட விதத்தில் ஆவிக்குரிய மரணவேதனையடைந்தான் ஏனென்றால் அவன் விலக்கப்பட்ட கனியைப் புசித்ததின் மூலம் தனிப்பட்ட விதத்தில் பாவஞ்செய்தான்.



**தற்சோதனை**

1. .......................................... மனிதன்தேவசாயலில் உண்டாக்கப் பட்டபடியினால், எதைச் செய்யும்படி அதிகாரம் உடையவனாயிருந்தான்? (A) தேவனைப் போலிருக்கும் (B) தெரிந்தெடுக்கும் (C) அவன் விரும்புகிறபடி செய்யும்

2. .......................................... மனிதன் தெரிந்தெடுக்கும் தகுதியினைப் பெற்றபடியினால், தெரிந்தெடுப்பது சம்பந்தமான என்ன பொறுப்பைப் பெற்றிருக்கக் கூடியவனாயிருக்கிறான்? (A) உக்கிராணப் பொறுப்பு (B) பொறுப்பில்லை (C) அவன் விரும்புகிறதைச் செய்தல்

3. .......................................... அவன் நடத்தையை சரிபடுத்தும்படி தேவன் மனிதனுக்கு எதைக் கொடுத்தார்? (A) இயற்கை விதிகளை (B) பரிசுத்த ஆவியை (C) நீதிக்கட்டளைகளை

4. .......................................... முதன் முறையாக ஆதாம் பாவஞ்செய்தபோது உலகத்தினுள் என்ன பிரவேசித்தது? (A) நித்திய ஜீவன் (B) ஆவிக்குரிய மரணம் (C) தெரிந்தெடுக்கும் தகுதி

**ஆம் / இல்லை :**

தேவனுடைய கட்டளைகளை மனதில் கொண்டு தெரிந்தெடுத்தலை உண்டாக்கும் உரிமை கொடுக்கப்பட்டவனாயிருப்பதினால், உன்னுடைய தெரிந்தெடுத்தலுக்குக் கணக்குக் கொடுக்கிறவனாயிருக்கிறாய் என்று பொருள்.

**வேதவாசிப்பு : ஆதி. 2, 3**

**வேத ஆராய்ச்சி: <u>தெரிந்தெடுத்தல் :</u> உபா.4:32; 30:19; யோசு.24:15; நீதி.1:29; ஏசா.45:12; 1தீமோ.2:13,14; அப்.2:40; 3:19; எபி.11:25; 2பேது 3:9, <u>கட்டளை :</u> சங்.19:17–11; 119:77,97; 1தீமோ. 1:9; யாக். 1:25;2:8, <u>நியாயத்தீர்ப்பு :</u> மத்.25; யோவா. 5:22; 12:48; அப் 17:30, 31; ரோம. 2:8, 16; எபி. 9:27; 10:27; 2பேது. 3:7, <u>பாவம்:</u> ரோம. 14:23; யா;க 4:17; 1யோவா. 3:4**

*பாடம் - 2ன் விடை பக்கம் 9-ல் பார்க்கவும்*

# அவள் பிள்ளைப் பேற்றினால் இரட்சிக்கப்படுவாள் என்பதன் பொருள் என்ன?

## What Does It Mean : "She shall be saved in Childbearing?"



*"அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலை கொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப் படுவாள்" (1 தீமோ. 2:15)*

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தைப் பார்க்கும் பொழுது ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளுடைய மீறுதல் செயலுக்கு திருப்பப்படுகிறோம். தேவன் ஏவாளின் மேல் அவள் செய்த காரியத்திற்கு சாபத்தைக் கட்டளையிட்ட போது, அவளது வேதனையும் அவளது கர்ப்பத்தின் வேதனையும் பெருகும் என்றும், வேதனையோடு பிள்ளை பெறுவாள் என்றும் கூறினார். அத்தோடு, ஸ்திரீக்கும் சர்ப்பத்திற்கும், சர்ப்பத்தின் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகையுண்டாக்குவேன் என்றும் கூறினார். "... அவர் உன் (பாம்பின்) தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை (ஸ்திரீயின் வித்து) நசுக்குவாய் என்றார்" (ஆதி. 3:15). இது ஸ்திரீயினின்று பிறக்க இருக்கிறவராகிய ரட்சகரைப் பற்றி கூறப்பட்ட முதல் தீர்க்கதரிசனமாயிருந்தது. இவ்வாறாக, உலகத்தினுள் பாவத்தையும், மரணத்தையும் கொண்டு வந்த ஸ்திரீயின் மூலம் அவளது கீழ்படியாமையினாலே வந்தது, கன்னி மரியாளிடத்திலிருந்து இயேசு கிறிஸ்து ஒருநாள் பிறக்கவிருக்கிற போது பாவத்திற்குப் பரிகாரமாக வருவதாகவுமிருந்தது. இதன் வழியாக, பிள்ளைப் பேற்றினால் இரட்சிக்கப்படுவாய் என்பது மனிதவர்க்கத்தினுடைய கீழ்படிதலுக்கு வருவதாகும்.

ஆனால், அத்துடன் தேவனிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தால் ஸ்திரீகள் பிள்ளைப் பேற்றினால் இரட்சிக்கப்படுவார்கள் என்பதில் வேறு இரண்டு காரியங்களும் உண்டு.

தேவன் ஆதாமுக்குக் கொடுத்தபோது, ஆண் படைப்பிற்கு, குடும்பத்தின் சகல தேவைகளைச் சந்திக்கும் பணியைக் கொடுத்தார், ஸ்திரீக்கு குடும்பத்தையும் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பைக் கொடுத்தார். 1 தீமோ. 5:14ல் ஸ்திரீகள், "விவாகம் பண்ணவும் பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும் ..." அறிவுறுத்தப் பட்டார்கள். தீத்து 2:4,5ல் "..... பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த

புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்படிகிறவர்களுமாயிருக்கும்படி,..." முதிர்வயதுள்ள ஸ்திரீகள் கற்றுக் கொடுக்க அறிவுறுத்தப்பட்டார்கள்.

விசுவாசத்துடன், தேவனால் கொடுக்கப்பட்ட இந்த வேலையை செயல்படுத்துவதில் அந்த ஸ்திரீகள் தேவனுடைய அங்கிகரிப்பைப் பெறக் கூடியவர்களாயிருக்க முடியும். வீட்டை நடத்தவும், பிள்ளைகளைப் பராமரிப்பதற்குமான தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படிதல் என்பது தெரிந்தெடுத்தலின் ஒரு காரியமல்ல; இது ஸ்திரீகளின் மீட்புக்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும் இப்படியாக, ஸ்திரீகள் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் பிள்ளைப் பேற்றினால் இரட்சிக்கப்படுவாள் ..."

இன்னொரு காரியத்தில், பிள்ளைப் பேற்றினால் இரட்சிக்கப்படுவாள் என்பது தனது தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சியில் சிறுகுழந்தையைப் பராமரிக்கும் நாட்களில் பல சந்தர்ப்பங்களில் குழப்பத்தையும் தடைகளையும் அனுபவிப்பாள். ஆராதனைக்கு தன்னோடு சிறுகுழந்தைகளை எடுத்துச் செல்லும் ஒரு ஸ்திரீயானவள் அவர்களது தேவைகளிலும், அழுகையிலும், அவர்களது அங்குமிங்குமான ஓட்டத்திலும், அவர்களது கூச்சலிலும் அவர்களது பசியிலும் தொடர்ந்து கவனம் செலுத்துகிறவளாயிருக்கிறாள். தொந்தரவு இல்லாமல் அவளால் ஆராதிக்க முடியாது. பல வருடங்கள் விசுவாசத்துடன் பரிசுத்தவான்களோடு கூடி ஆராதிக்கும்படி அவள் செல்ல இயலும் இருந்தாலும் அவளுடைய குழந்தைகளினிமித்தம் மனதை ஒருமுகப்படுத்தி தரித்திருப்பது கடினமானதாக இருக்கும்.

தேவன் சிசுக்களின் உதவியற்ற சூழ்நிலையையும், அவர்களது தேவைகள் என்ன என்பதையும், சிறு குழந்தைகள் எப்படியிருப்பார்கள் என்பதையும் அறிந்தார். அவர் விசேஷமாக இந்த தேவைகளை சமாளிப்பதற்கு, அக்கறை, பொறுமை, அன்பு நிறைந்த உள்ளம், உணர்ந்து கொள்ளும் ஆவி, முழுவதுமாகப் பற்றிக் கொள்ளும் அன்பு போன்றவற்றை கொடுப்பதில் ஸ்திரீயினது அவரது படைப்பிற்கு ஏற்ற பாத்திரமாக ஸ்திரீயைப் படைத்தார். இதுவே ஸ்திரீயினுடைய இயற்கை குணம், புருஷனுடைய இயற்கை குணம் இந்த அளவிற்கு எடுத்துக்காட்டாக இல்லை. தாய் ஸ்தானத்தில் அவள் நாள் முழுவதும் தாய் அன்பைக் காட்டுகிறது போல, தேவனால் தரப்பட்ட குணாதிசயத்தில் வளருபவளாகவும், அவளது குழந்தைகளை சமாளிப்பதில் எப்பொழுதும் அன்பு நிறைந்தவளாகவும், பொறுமையுள்ளவளாகவும், ஞானமுள்ளவளாகவும் இருக்க வேண்டும். இவ்வாறாக தேவன், அவள் செய்யும்படி அவளுக்குக் கொடுத்திருக்கிற வேலையில் முன்னேற்றம் அடைவதன் மூலம் அவளது சொந்த வாழ்வு வளமுடையதாகவும், தெய்வ பக்தி நிறைந்ததாகவும் இருக்கிறது.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

ஆனால் அவ்விதமாக சிரத்தை எடுக்கும் நாட்கள் முழுவதும் அவள் விசுவாசம் நிறைந்தவளாயிருக்க வேண்டும். கவனம் சிதறாமல் ஆராதிப்பதற்கு சில சந்தர்ப்பங்கள் இருப்பதை அறிந்தும், வாசிப்பதற்கும் தேவனுடைய வார்த்தையின் மேல் அவளுடைய உள்ளான ஆவிக்குரிய பசியை திருப்தி செய்வதற்கும் நேரம் போதாமலிருந்தும், அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தபோதிலும் ஆவிக்குரிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதிலும், இரண்டு வயதுக்கு சமமான அல்லது ஐந்து வயதாகவுமிருக்கும் குழந்தைகள் மேல் அவளது அதிகமான எண்ணங்கள் இருக்கும். இருந்தபோதிலும் அவள் தேவனோடுள்ள தனது தனிப்பட்ட உறவை உறுதியாகப் பிடித்துக் கொள்வதில் கவனமுடையவளாயிருக்க வேண்டும். தாய் ஸ்தானத்தில் அவள் சந்திக்கிற சவால்களில், அவள் கற்றுக் கொள்ள வேண்டியவை.

- தேவனில் ஆழமான நம்பிக்கை
- அவருடைய பராமரிப்பில் அதிகமாக சார்தல்
- அவருக்காக அதிக அனல் கொண்ட அன்பு கொள்ளுதல்
- பரிசுத்தத்தில் உச்சக்கட்டத்தில் இருத்தல்
- மேலும் உண்மையாக சுயக்கட்டுபாட்டின் ஒழுங்கைப் பயிற்சி செய்வதற்குப் போதுமான சந்தர்ப்பங்கள் இருக்கும்!

ஏன் இவள் இந்த குணாதிசயங்களைப் பயிற்சி செய்ய வேண்டும்? ஏனென்றால், தேவனோடுள்ள அவளது ஐக்கியம் இவ்விதமாக மாறாதிருக்குமானால் அவள் தேவனில் கொண்டுள்ள ஜீவனுள்ள விசுவாசத்தை தன் குழந்தைகளிடம் காட்ட முடியாது - எல்லா சவால்கள் இருந்தும் - இது அவளது வாழ்வின் மிக முக்கியமான பகுதியாகும். ஆனால் அவளது சொந்த வளர்ச்சியோடு அவள் போராடாடுகிற பொழுது, தனது குழந்தைகளுக்கு ஆவிக்குரிய வழிகாட்டுதலைக் கொடுக்கும் போது, அவள் வாழ்வின் எல்லா சவால்களையும் எதிர்க்கக் கூடிய விசுவாசத்திலும் தேவனுக்கு அர்ப்பணிப்பதற்கு வலிமைமிக்க ஆவிக்குரியவளாகப் பூரண வளர்ச்சியடைவாள்.

"அப்படியிருந்தும் தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால் பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்."

*Betty Burton Choate*



தமிழில் : J. குளோரி அர்ஜுனன்

# கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு


(1) கிரியையினாலல்ல
நன்மை? ரோமர் 3:10, 23; லூக்கா 17:10
கட்டளை? கலாத்தியர் 2:16; ரோமர் 3:20, 28
கீழ்ப்படிதல்? யோவான் 6:29; யாக்கோபு 2:24

(2) கிருபையினால் இரட்சிப்பு
தேவனுடைய ஈவு - யோவான் 3:16; ரோமர் 5:8
மரணம், அடக்கம், உயிர்தெழுதல் :
யோவான் 15:13, Iகொரிந்தியர் 15:1-4

(3) விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு
மனிதனுடைய பங்கு - யோவான் 6:29; 20:30, 31
எபிரேயர் 11:6; ரோமர் 10:10, 17
லூக்கா 13:3, அப்போஸ்தல நடபடிகள் 3:19, 17:30, 31
2:38; 10:48 22:16

தேவனுடைய பங்கு

மரணம் - ரோமர் 5 : 8
அடக்கம் - I கொரிந்தியர் 15:1-4
உயிர்த்தெழுதல் - I பேதுரு 1:3




மனிதனுடைய பங்கு

மரணம் - கொலோசேயர் 2 : 12
அடக்கம் - ரோமர் 6:2, 6
உயிர்த்தெழுதல் - ரோமர் 6 : 11

Dillard Thurman

பொருள் : துன்பத்தில் பெருகும் ஆறுதல்
ஆக்கியோன் : பவுல்
காலம் : கி.பி. 53

**திட்டவரைக் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| A. | கர்த்தரின் வருகை நிச்சயம் | 1 : 1-6 |
| B. | தேவனுக்கு கீழ்ப்படியாதவர்கள் தப்புவதில்லை | 1 : 7-8 |
| C. | வருகைக்கு சபையின் ஆயத்தம் | 2 : 1-17 |
| D. | பரிசுத்த கிறிஸ்தவ வாழ்க்கை | 3 : 1-18 |

**சிறப்புச் செய்தி :**

**A. தேவனை அறியாதவர்கள் - யாரானாலும் சரி**

**B. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்கள் - பேர் கிறிஸ்தவர்கள் யாவரும் தப்ப முடியாது**

**வரலாற்று பின்னணி :**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டாம் முறையாக வந்து விட்டார் என்று ஒரு புரளியை கள்ள உபதேசக்காரர்கள் கிளப்பி விட்டனர்.

அதற்கு ஏற்றார் போல, தெசலோனிக்கேயாவில் பஞ்சம், கொடுமை, உபத்திரவம் அதிகம் பரவியது.

இதை அவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு பிந்திய நிலை என நம்பத் தொடங்கினர் (2 தெச. 2:2-3)

மேற்கண்ட காரணங்களை மறுக்கவும், அவர்கள் உபத்திரவத்தை சகித்து தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென இந்நிருபத்தை எழுதுகிறார்.

**– Selected**

**ஜெபியுங்கள்**

1. பத்திரிக்கை வளர்ச்சிக்காக
2. இந்தியாவில் உள்ள 100 கோடி ஆத்துமாக்களுக்காக
3. இலங்கை சமாதானத்திற்காக

# ஜூன் மாத வேத அறிவுப் போட்டி

**குறிப்பு :**

வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் மட்டுமே விடைகளை எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் எழுத மறக்க வேண்டாம். விடைகள் இம்மாத இறுதிக்குள் வந்து சேர வேண்டும். உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.

1. இஸ்ரவேலிலே காணப்பட்டவர்களையெல்லாம் தங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கும்படி செய்த ராஜா யார்?
2. பேதுரு வாசற் கதவை தட்டின போது ஒற்றுக் கேட்க வந்த பெண்ணின் பெயர் என்ன?
3. அவர் கர்த்தர் என்று கேட்டவுடனே வஸ்திரமில்லாதவனாயிருந்த படியினால், தன் மேற்சட்டையைக் கட்டிக் கொண்டு கடலிலே குதித்தவன் யார்?
4. நீதி எம் மார்க்கத் தானைத் தற்காக்கும்?
5. எவளுடைய தகப்பனும் தாயும் மரணமடைந்தபோது, அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக் கொண்டவன் யார்?
6. பரிசுத்தருடைய வார்த்தைகளை நான் மறைத்து வைக்கவில்லை என்று சொன்ன தாசன் யார்?
7. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் எந்தப் பூவைபோலவுமிருக்கிறது?
8. நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக எது நம்மிடத்தில் பூரணப்படுகிறது?
9. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு அதை எப்படிப்பட்ட இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்?
10. தேவன் தனிமையானவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை என்ன செய்கிறார்?

## நடப்பு செய்திகள்

*1. 11.5.2000ல் இந்தியாவின் மக்கள் தொகை 100 கோடியாக உயர்ந்துள்ளது.*

*2. இலவச பஸ்பாஸ் - மின்சாரம் உடனே நிறுத்த மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுரை.*

*3. இங்கிலாந்து பிரதமரின் மனைவி செர்ரி பிளேருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது அவருக்கு வயது 45.*

*4. நதி நீர் பிரச்சினைகளை தீர்க்க ஆறுகளை தேசியமயமாக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் வலியுறுத்தி உள்ளார்.*

*5. இந்தியாவை சேர்ந்த ராஜ்பால்சிங் (வயது 42) இவர் தன் மனைவி அம்சவாகினி மற்றும் 9 வயது மகள் ஆதித்யாவுடன் உலகை சைக்கிளில் சுற்றி வருகிறார்.*

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

REGISTERED NEWS PAPER
For Free Distribution
Editor
THE WORD OF CHRIST
P.O. Box 5
Batlagundu - 624 202.
S. India

Edited by B.Arjunan on behalf of Church of Christ
17.2.102-D/5, Rajan Nagar
Batlagundu and Printed at Novelty Press
Madurai-625 001. ✆ 748789

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி

வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி



All are Welcome

கிறிஸ்துவின் சபை
2.2.102-D/5, ராஜன் நகர்
வத்தலக்குண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்
போன் : (04543) 23278

# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 p.m 8.00 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Sunday,<br>Tuesday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.30 p.m 5.45 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 p.m 2.00 p.m | 3/5, 7th A Main, Tatasilk Farm<br>Bangalore - 560028 | ROBERT RATHNAKAR |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST